0051

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

බෞද්ධ ශිෂ්ටාචාරය I
பௌத்த நாகரிகம் I
Buddhist Civilization I

45 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** புத்தர் காலத்தில் இந்தியாவின் புகழ்பெற்ற சமய ஆசிரியர்களில் 'மரணத்தின் பின்னர் உயிர்கள் தொடர்ந்து இருப்பதில்லை' எனப் போதித்தவர்,
(1) பூரண கசப்ப. (2) பகுட கச்சாயன. (3) அஜித கேசகம்பல.
(4) மக்கலி கோசல. (5) நிகண்ட நாதபுத்த.

**2.** பின்வருவன புத்தர் காலத்து இந்தியாவில் சமய நம்பிக்கைகள் பற்றிய ஐந்து கூற்றுக்களாகும்.
A - ஈஸ்வர நிர்மாணவாதம் பௌத்த யுகத்திற்கு முந்திய காலம் தொடக்கம் ஆழமாக வேரூன்றியிருந்தது.
B - 'அகிரியா வியாகாசி' எனப்படும் அகிரியாவாதி போதனைகள் பூரணகசப்பவினால் அறிமுகப்படுத்தப்பட்டது.
C - இந்திராகீலய என நிலையான பதவி, ஆபோ, தேஜோ வாயோ, சுக, துக்க, ஜீவ எனும் சப்தகாயவாத பகுட கச்சாயனவினால் முன்வைக்கப்பட்டது.
D - சத்துயாம சங்வரய ஜைன மரபுக்குரிய போதனையாகும்.
E - பொய்யாமையின் பயம் காரணமாக விடை கூறாதிருத்தல் சம்சயவாதத்தின் ஒரு பண்பாகும்.
மேற்குறித்த கூற்றுக்களுள் சரியானது,
(1) A, B மட்டும். (2) A யும் B யும் மட்டும். (3) A, B, C மட்டும்.
(4) A, B, C, D மட்டும். (5) A, B, C, D, E அனைத்தும்.

**3.** புத்தர் காலத்தில் இந்தியாவில் வர்த்தகமயமாதலையும் நகரமயமாதலையும் அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்ட சமூக, பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்த ஒரு முக்கிய காரணமாக அமைந்தது,
(1) தேவ நிர்மாண வாதத்தை அடிப்படையாகக் கொண்ட பிராமணீய போதனைகள் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட சுவதர்மகோட்பாடு நன்கு நடைமுறைப்படுத்தியமை.
(2) அடிமைத்தனத்துக்கு எதிராக கீழான குலத்தவர் எழுச்சி பெறுதல்.
(3) சிரமண மரபினால் மரபுவழி பிராமணக் கற்பித்தல்கள் கடுமையாக விமர்சனத்துக்குள்ளாகுதல்
(4) புதிதாகத் தோன்றிய வர்த்தக வகுப்பினரால் வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம் முகாமைத்துவம் செய்யப்படுதல்.
(5) மத்ஸய கோட்பாட்டுக்கு ஏற்ப சக்தி மிக்க அரசுகள் அருகிலுள்ள சிறிய அரசுகளைக் கைப்பற்றி அரசாட்சி பிரதேசங்களை விரிவாக்குதல்.

**4.** பின்வரும் கூற்றுக்களை வாசித்துச் சரியான கூற்றினை தெரிவுசெய்க.
(1) தானம் வழங்குவது பிராமண குலத்துக்கு உரிய சுயதர்மம் அல்ல.
(2) விவசாயம் பற்றிய பொறுப்பு க்ஷத்திரயரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.
(3) இல்லற வாழ்க்கையில் (கிருகஸ்த ஆஸ்ரம்) திரிவேத கற்றல் கட்டாயமாகும்.
(4) பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் என்ற மூன்று குலத்தவரும் யாகம் செய்யும் உரிமை பெற்றிருந்தனர்.
(5) க்ஷத்திரியர் அனர்த்த காலங்களில் பிராமண சுயதர்மத்தில் ஈடுபட அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

[பக். 2 ஐப் பார்க்க

**5.** 'அரச படையினர் துறவியாக்கப்பட முடியாது' என்ற ஒழுக்க விதியை புத்தர் விதித்தது .......................... அரசனின் வேண்டுகோளுக்கு அமைவாக ஆகும்.
(1) சேநிய பிம்பசார (2) பஸ்சேநத் கோசல (3) அஜாசத்த
(4) உதேன (5) சண்டபஜ்ஜோத

**6.** பின்வரும் வாக்கியங்களை கவனமாக வாசிக்குக.
A - புத்தர் காலத்து மகத இராச்சியம் கிஞ்ஞகுட முதலிய ஐந்து மலைகளினால் சூழப்பட்டு அமைந்திருந்ததால் 'கிரிப்பஜ' என்ற பெயரால் புகழ் பெற்றிருந்தது.
B - உதேன மன்னன் புத்தர் காலத்து வத்ச இராச்சியத்தின் ஆட்சியாளன் ஆவார்.
C - மகா கச்சான தேரரிடம் போதனை கேட்ட சண்டபஜ்ஜோத மன்னன் மும்மணிகளிடம் சரணடைந்தார்.
D - வெஜ்ஜி இராச்சியத்தில் கணதந்திர ஆட்சிமுறை நடைமுறையில் இருந்தது.
E - புத்தர் பத்தொன்பது ஆண்டுகள் கோசல ராச்சியத்தில் வாழ்ந்தார்.
மேல்வரும் கூற்றுக்களில் சரியானவை,
(1) A, B மட்டும். (2) A, C மட்டும். (3) A, B, C மட்டும்.
(4) A, B, C, D ஆகியன மட்டும். (5) A, B, C, D, E எல்லாம்.

**7.** கவரக்கூடிய பேச்சைக் கொண்ட உபாசிகாகளுள் முதன்மை இடம்பெற்ற .......................... பதினாறு வருடங்கள் இல்லற பிரம்மசாரியத்தை பாதுகாத்தார்.
(1) கேமா (2) உப்பலவண்ணா (3) விசாகா
(4) பந்துல மல்லிகா (5) நகுல மாதா

**8.** புத்தர் காலத்து மகாதேரர் சிலர் பற்றிய ஐந்து கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A - நான்கு வித கொண்ணிலைகள் இல்லாது அருகர் நிலை அடைந்தார்.
B - புரிந்துணர்வு சக்தி உடைய பிக்குமார்களிடையே முதன்மையிடம் பெற்றார்.
C - ஆழமான தர்ம விடயங்களை எளிமையாக விவரிக்கும் ஆற்றல் கொண்டிருந்தார்.
D - கல்வியறிவு மிக்க பிக்குமார்களிடையே முதன்மையிடம் பெற்றிருந்தார்.
E - பரிநிர்வாணத்துக்கு முன்னர் தனது தாயாரை ஞானப்பயனை அடையச் செய்தார்.
மேலுள்ள கூற்றுக்களில் ஆனந்த மகாதேரரின் வரலாற்றுடன் மட்டும் தொடர்புடைய தகவல்கள் மட்டும் அடங்கிய விடையினைத் தெரிவுசெய்க,
(1) A, B, C (2) A, B, D (3) A, B, E (4) B, C, D (5) B, C, E

**9.** "புத்தர் எங்கள் மனித விருட்சத்தில் பூத்த மலர் ஆவார். இந்த மலர் எல்லையற்ற இலட்சக்கணக்கான வருடங்களின் பின்னர் பூக்கும் ஒன்றாகும். அதிலிருந்து வீசும் ஞான நறுமணம், மற்றும் பொழியும் வைரம் போன்ற மகா கருணை என்பன உலகை நிரப்புகின்றன."
மேலே தரப்பட்டுள்ள கூற்றினைக் கூறியவர்,
(1) பேராசிரியர் லக்ஷ்மீ நரசு. (2) எட்வின் ஆர்னோல்ட். (3) பேராசிரியர் மக்ஸ் முல்லர்.
(4) பெட்ரம் ரஸ்ஸல். (5) அல்பேட் ஐன்ஸ்ரீன்.

**10.** துண் லொவ தத்துலெஸட
தனகென நொதத்தனஹுட
தெசுயென் நியமகொட
..........................................
இந்த வரிகளில் விவரிக்கப்படும் புத்தரின் பண்பு யாது?
(1) சுகத (2) சம்மாசம்புத்த (3) லோகவிது
(4) பகவா (5) விஞ்ஞாசரண சம்பன்ன

**11.** முன்மாதிரியான அரசாட்சி பற்றி மிக முக்கிய தகவல்கள் அடங்கிய 'சக்க வத்திசீஹநாத' சூத்திரத்திற்கு அமைய சக்விதி அரசரால் தனக்குக் கீழிருந்த அருகிலிருந்த அரசுகளின் ஆட்சியாளர்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களாவன,
(1) பஞ்சசீல கோட்பாடுகளுக்கு ஏற்ப அரசு ஆட்சி செய்யப்பட வேண்டும்.
(2) வறுமையை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(3) தமது அரசுகளில் குற்றங்களைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(4) சக்கரவர்த்தி அரசு என்பது தந்தையிடமிருந்து மகனுக்கு உரிமையாகும் சொத்து அல்ல.
(5) பறவைகள், மிருகங்களுக்கும் அனைத்து மனிதர்களுக்கும் நீதியான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

[பக். 3 ஐப் பார்க்க

0051

**12.** “அம்ஹாகங் சாலீனம் பாகம் அனுப்பதஸ்ஸாமி” என்பதால் குறிப்பிடப்படுவது,
(1) செல்வத்தை முகாமைத்துவம் செய்தல் பற்றிய போதனைகள் ஆகும்.
(2) ஆட்சியாளரால் மக்களுக்கு நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்புக்கள் ஆகும்.
(3) இல்லறத்தானால் சமூகத்துக்கு நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்புக்கள் ஆகும்.
(4) மக்களால் அரசுக்கு நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்புக்கள் ஆகும்.
(5) செல்வத்தை ஈட்டுதல் பற்றிய போதனைகள் ஆகும்.

**13.** பஞ்சம், அனர்த்தங்கள் போன்றவற்றால் மக்கள் துன்பத்தில் இருக்கும் சந்தர்ப்பங்களில் ஆட்சியாளர்கள் வரிகளை மக்களுக்கு விதிக்கக்கூடாது என்பதை வலியுறுத்தும் போதனைகள் அடங்கியது,
(1) அக்கண்ண சூத்திர.
(2) சக்கவத்திசீஹநாத சூத்திர.
(3) மஹா பரிநிப்பாண சூத்திர.
(4) அதம்மிக சூத்திர.
(5) குட்டந்த சூத்திர.

**14.** நீதியான ஆட்சியாளர் கொண்டிருக்க வேண்டிய பத்து பண்புகள் பற்றி ஜாதக பாளியில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அவை தசராஜதம்ம எனக் கூறப்படுகிறது. ஆட்சியாளர் பக்கச்சார்பின்றி நேர்மையாக செயற்பட வேண்டும் என்பதும் மக்களின் துன்பம் துயரங்கள் பற்றிய உணர்வுடன் விவேகமாகச் செயற்பட வேண்டும் என்பதும் அவற்றுள் இரண்டு ஆகும். அந்த இரண்டு பண்புகளையும் (ராஜ தர்ம) உள்ளடக்கும் தெரிவு,
(1) பொறுமை - சாந்தம்
(2) கோபம் கொள்ளாதிருத்தல் - நேர்மை
(3) தாராளமனப்பான்மை - நேர்மை
(4) நேர்மை - சாந்தம்
(5) அஹிம்மை - சாந்தம்

**15.** எந்தவொரு நிர்வாக முறையும் வீழ்ச்சியடைவதில் செல்வாக்கு செலுத்தும் பிரதான காரணி ஒருவருக்கொருவர் குற்றங்கள் கூறுவதால் அமைதி குலைவதாகும். நன்மையளிக்கும் அரசாட்சிக்கு ஒற்றுமையுடன் செயற்படுதலின் முக்கியத்துவம் பௌத்த அரசியல் நிர்வாக கோட்பாடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன இந்த பௌத்த அரசியல் கோட்பாடு ........................ எனப்படும்.
(1) தச சக்வித்வத்
(2) சத்திர அகதியிலிருந்து விலகியிருத்தல்
(3) தசராஜ தர்ம
(4) பஞ்ச சீல
(5) சப்த அபரிஹானிய தம்ம

**16.** சுதந்திரமாக வாழும் உரிமை, செல்வத்தைப் பாதுகாக்கும் உரிமை குழப்பமில்லாத குடும்ப வாழ்க்கை நடத்தும் உரிமை என்பவற்றை ஊக்குவிக்கும் பௌத்த நீதிநெறிப்போதனை,
(1) பஞ்சசீலம ஆகும்.
(2) சட்டத்திற்கு மதிப்பளித்தல் ஆகும்.
(3) நான்கு பம்ப விஹரண ஆகும்.
(4) சமூக சகவாழ்வு ஆகும்.
(5) லோக பாலக தர்மம் ஆகும்.

**17.** ஒரு வண்டிக்கான அச்சாணிபோல சமூகத்தின் நல்வாழ்வுக்கு நன்மையளிக்கும் ஒரு பௌத்த நீதிக் கோட்பாடு சிகாலோவாத சூத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது,
(1) நடத்தையில் நான்கு விகாரங்கள் (சத்தர கம்மக்கிலேச).
(2) உலகை உபசரிக்கும் நான்கு வழிகள் (சத்தர சங்சிரக வஸ்து).
(3) நான்கு மேலான வசிப்பிடங்கள் (சத்தர பிரம்ம விஹரண).
(4) நான்கு பந்தனங்களை விலக்குதல் (சத்தர அகதியென் தொரவீம).
(5) கவனத்தின் நான்கு காரணிகள் (சத்தர சத்திபதானய).

**18.** “கண்ணாடியில் தனது உடம்பை தானே அவதானிப்பதுபோல உடம்பு, வார்த்தை மனதின் செயற்பாடுகளை விளங்கிக்கொள்ள வேண்டும்.” அம்பலத்திக்க ராகுலோவாத சூத்திரத்தில் போதிக்கப்படும் இந்த தர்மோபதேசத்திலிருந்து ........................ அவதானித்து தவறான செயற்பாடுகளிலிருந்து விடுபட்டிருக்க அறிவுரை பெறப்படுகிறது.
(1) தனக்கு ஏற்படும் கேடு
(2) பிறருக்கு ஏற்படும் கேடு
(3) தனக்கும் பிறருக்கும் ஏற்படும் கேடு
(4) இவ்வுலக வாழ்வு மறுவுலக வாழ்வில் ஏற்படும் துன்பம்
(5) லோப, தோஸ, மோஹ அதிகரித்தல்

[பக். 4 ஐப் பார்க்க

**19.** சிகாலோவாத சூத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'ஐ அபாய முக' அல்லது செல்வத்தின் அழிவுக்கான வழிகளில் **உள்ளடக்கப்படாத** தெரிவு,
(1) பெண்களிடத்தில் விருப்புடையவராயிருத்தல்.
(2) மதுபானத்தில் விருப்புடையவராயிருத்தல்.
(3) சூதாட்டத்தில் விருப்புடையவராயிருத்தல்.
(4) தீய நண்பர்களின் சகவாசத்திலிருத்தல்.
(5) சோம்பேறித்தன்மை.

**20.** வியக்க பஜ்ஜ சூத்திரத்தில் குறிப்பிட்டுள்ளவாறு வளங்களை நுகரும்போது அஜத்துமாறிக அல்லது பெருமளவு செல்வம் உள்ளபோதும் உண்ணாது பருகாது இறந்துபோகும் குறைவான நுகர்வும் உதும்பரபாதிக அல்லது வீணான உதும்பர பழத்தை உண்பதான மேலதிக நுகர்வும் பௌத்தத்தில் நிராகரிக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் வளங்களின் நுகர்வு முகாமைத்துவம் பற்றிய பௌத்தத்தின் அறிவுறுத்தலாகக் குறிப்பிடக்கூடியது,
(1) நடுநிலைப் பாதை. (2) சம்மா அஜிவ.
(3) பஞ்சபலி கோட்பாடு. (4) சமஜிவிக்கதா.
(5) போக சுக.

**21.** "மனதைக் கவரும் மரங்கள் முழுமையாக மலர்ந்த மலர்களுடன் இனிமையான நறுமணத்தை நாலா புறங்களிலும் பரப்பி பழுத்த இலைகளை வீழ்த்தி பழங்களை தருவதற்கு அண்மித்தனவாக உள்ளன. வணக்கத்திற்குரிய நாயகன் பிரிந்து செல்வதற்குரிய நேரம் சரியானது" தேரகாதா பாளியில் வரும் இந்த சூழல் வர்ணனையை அறிமுகப்படுத்தியவர்,
(1) சங்கிச்ச தேரர். (2) வங்கீச தேரர். (3) சப்பக்க தேரர்.
(4) வனவச்ச தேரர். (5) காலுதாயி தேரரர்.

**22.** பூந்தோட்டங்கள், பழத் தோட்டங்கள் வளர்ப்போர்
காடுகளை வளர்ப்போர்
ஒற்றையடிப் பாலம் அமைப்போர்
தண்ணீர்ப் பந்தல், குளங்கள் குடியிருப்புக்கள் அமைப்போர்
இத்தகைய சூழல் பாதுகாப்பு செயற்பாடுகளைச் செய்வோர் பெறும் (ஆனிசங்ஸ) பிரதிபலன்கள் சம்யுக்தநிகாய மற்றும் வனரோப சூத்திரத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள முறை,
(1) இவ்வுலக வாழ்க்கையிலும் மறுவுலக வாழ்க்கையிலும் சந்தோஷம்.
(2) நிர்வாண மூலம் அமைதி.
(3) இரவும் பகலும் புண்ணியங்களின் சேமிப்பு.
(4) நல்ல இராச்சியத்தில் மறுபிறவி.
(5) குழப்பமில்லாத மரணம்.

**23.** செல்வத்தை முகாமைத்துவம் செய்தல் பற்றிய சிகாலோவாத சூத்திரத்தின் பௌத்தமத அறிவுரைப்படி சம்பாதித்த செல்வம் நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு நுகரப்படவேண்டும் என்பதாகும். இதற்கேற்ப பின்வருவனவற்றுள் மிகச் சரியான கூற்று,
(1) இரண்டு பாகங்கள் நுகர்வுக்கும் எஞ்சிய பகுதி முதலீட்டுக்கும் சேமிப்புக்கும் ஆகும்.
(2) இரண்டு பாகங்கள் சேமிப்புக்கும் எஞ்சிய பகுதி நுகர்வுக்கும் முதலீட்டுக்கும் ஆகும்.
(3) இரண்டு பாகங்கள் முதலீட்டுக்கு வேறாக்கி வரவுக்கும் செலவுக்கு இடையே சமநிலை பேணுவதற்கு ஆகும்.
(4) முதலீடு சேமிப்பு போலவே ஒருபகுதி துறவிகளுக்கான தானம் போன்றவற்றுக்கும் மறு உலகுக்கான நன்மைக்கும் ஆகும்.
(5) இரண்டு பாகம் முதலீட்டுக்கும் எஞ்சிய ஒவ்வொரு பகுதியும் நுகர்வுக்கும் சேமிப்புக்கும் ஆகும்.

**24.** 'சச்சேன அலிகவாதினம்' என்ற தம்ம பத வரிகளின் கருத்து,
(1) பொய் பேசுபவர் சத்தியத்தினால் வெற்றிகொள்ளப்படுவர்.
(2) பொய் கூறுபவரை நம்ப முடியாது.
(3) சத்தியம் என்றோ ஒருநாள் வெற்றி பெறும்.
(4) சத்தியத்தினால் அன்றி பொய்மையினால் எதையும் வெற்றிகொள்ள முடியாது.
(5) சத்தியம் சுவர்க்கத்திற்கு இட்டுச்செல்லும் பொய்மை நரகத்தில் சேர்க்கும்.

[பக். 5 ஐப் பார்க்க

**25.** மங்கல சூத்திரத்தில் குறிப்பிடப்படும் 'பாகுசச்சம்' என்பதன் கருத்து யாது?
(1) எப்போதும் உண்மையாக இருப்பது
(2) நான்கு மேலான உண்மைகளை உணர்ந்திருத்தல்
(3) கற்றறிந்தவராயிருத்தல்
(4) கலைகளில் திறன்மிக்கவராயிருத்தல்
(5) நன்னடத்தை கொண்டிருத்தல்

**26.** 'தம்மகாமோ பவம் ஹொதி' என்பதன் கருத்து தர்மத்தை விரும்புவர் முன்னேற்றம் அடைவார் என்பதாகும். இந்தக் கூற்று அடங்கிய சூத்திரம் எது?
(1) மகாமங்கல (2) சிகாலோவாத (3) வியக்கபஜ்ஜ
(4) பராபவ (5) வசல

**27.** புத்தர் சீடர்களின் திறன்களை விளங்கிக்கொண்டு அவர்களுக்கு மதிப்பு அளித்தார் உயர் பதவிகள் வழங்கியமை அதற்கு உதாரணமாகும். இதற்கமைய ஒவ்வொரு துறையிலும் விசேட திறன்மிக்க ஆண், பெண் சீடர்களுக்கு உயர் பதவிகள் வழங்கியமையால் வெளிப்படுத்தப்படும் புத்தரின் பண்பு,
(1) நெகிழ்ச்சித் தன்மை. (2) மகா கருணை.
(3) ஆசிரியரின் தனித்துவம். (4) அனதிமானி.
(5) யதாவதி ததாகாரி.

**28.** சுதங்க பயிற்சி செய்வோரிடையே முதன்மை இடம் பெற்றவர் ......................... மகாதேரர் ஆவார்.
(1) மகாகசப்ப (2) அனுருத்த (3) கொண்டஞ்ஞ
(4) உபாலி (5) மஹாகச்சானா

**29.** துரோணவஸ்து பிரதேசத்தை அணுகியதும் உறவினர்கள் உள்ளிட்ட பிரதேச வாசிகள் அனைவரும் துறவு பூணுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டவர்,
(1) சாரிபுத்த தேரர்.
(2) மொக்கல்லான தேரர்.
(3) புண்ணாமந்தானிபுத்த தேரர்.
(4) மகா கசப்ப தேரர்.
(5) கொண்டஞ்ஞ தேரர்.

**30.** முதலாவது பௌத்த மகாநாட்டின் விளைவாகக் கொள்ளப்பட **முடியாத** விடயம் எது?
(1) புத்தானுத்தக போதனைகளில் மாற்றம் செய்யாதிருக்க தீர்மானித்தல்
(2) தம்ம, வினய என்பவற்றை ஆசிரியராகக் கருதத் தீர்மானித்தல்
(3) புத்தரின் கோட்பாடுகளை ஐந்து நிகாயாக்களாகத் தொகுத்தல்
(4) பிக்கு - பிக்குணி ஒழுக்கங்களை ஐந்து நூல்களாகத் தொகுத்தல்
(5) தர்ம, வினய என்பவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பை மாணவர் பரம்பரையிடம் ஒப்படைத்தல்

**31.** வஜ்ஜிபுத்தக பிக்குமாரால் யச தேரர் பட்டிசாரணிய, உக்கேபனிய வினய கம்மவினால் தண்டிக்கப்பட்டார். ஏனெனில்,
(1) தசவஸ்து வினய விரோதி எனக் கூறியதால் ஆகும்.
(2) காலாசோக மன்னனுக்கு வெஜ்ஜீபுத்த பிக்குமார்களின் ஒழுக்க விரோத செயல்களை அறிவித்ததினால் ஆகும்.
(3) பிக்குகளுக்கு பணம் கொடுக்க வேண்டாமென விசால நகர வாசிகளுக்கு விழிப்புணர்வு செய்ததினால் ஆகும்.
(4) பணம் தானம் செய்வதை எதிர்த்தமையால் ஆகும்.
(5) வஜ்ஜீபுத்தக பிக்குமார்களுக்கு எதிராக சங்கத்திடம் குற்றச்சாட்டுகளை முன்வைத்ததினால் ஆகும்.

[பக். 6 ஐப் பார்க்க

**32.** அசோக மன்னன் குறிப்பிட்டதொரு நடவடிக்கைக்காக மந்திரி ஒருவரை நியமித்து பிக்குமாரை சந்திக்க அனுப்பியதாகவும் அந்த மந்திரியின் முயற்சி தோல்வி கண்டதால் அவர் பிக்குமாரைக் கொலை செய்ததாகவும் வரலாற்று அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அசோக மன்னனால் இந்த மந்திரி நியமிக்கப்பட்டது,

(1) பிக்குமார் வினய கம்ம செய்யாதிருப்பதற்கான காரணங்களைத் தேடி ஆராய்வதற்கு ஆகும்.
(2) பிக்குமார்களுக்கு இடையிலான வினயம் பற்றிய பிணக்குகளைத் தீர்ப்பதற்கு ஆகும்.
(3) பிக்குமார்களின் வினயவுக்கு எதிரான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு ஆகும்.
(4) பிக்குமார் தர்மவினய என்பவற்றுக்குத் தவறான கருத்து விளக்கம் கூறுவதற்கான காரணங்களைப் பரிசீலிப்பதற்கு ஆகும்.
(5) ஒழுக்கமுடைய பிக்குகளின் செயற்பாடுகளை ஒழுக்கமற்றவர்கள் இடையூறு விளைவிப்பதைத் தடுப்பதற்கு ஆகும்.

**33.** மனிதக் கொலை காரணமாக துன்பம் அடைந்த அசோக மன்னன் திக்விஜய கொள்கையைக் கைவிட்டு தர்ம விஜயக் கொள்கையைப் பின்பற்ற முற்பட்டது பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு எது?

(1) மஸ்கி (2) கிரிநார் (3) கால்சி (4) பாபுறு (5) பிரமம்மகிர்

**34.** கனிஷ்க மன்னால் புத்த சமயத்தின் நீண்ட கால நிலைத்திருப்புக்கு ஆற்றிய மூன்று சேவைகள் பின்வரும் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

A - நான்காவது பௌத்த மகாநாட்டுக்கு அனுசரணை வழங்குதல்
B - ஒழுக்கமில்லாத பிக்குகளை வெளியேற்றி பௌத்த சமயத்தைத் தூய்மைப் படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டமை
C - தர்மத்தை செப்புத் தகடுகளில் எழுதி கற்பேழையுடன் புதைப்பதற்கு பெரிய தூபியைக் கட்டுதல்
D - புத்தரின் ரூபத்தைப் பதித்த நாணயங்கள் தயாரித்தல்
E - இந்தியாவிலும் இந்தியாவுக்கு வெளியேயும் சமயப் பிரசாரங்களுக்காக பிரதான அமைச்சர்களை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

**மூன்று** சரியான கூற்றுக்கள் அடங்கிய விடை,

(1) A, B, C (2) A, C, D (3) B, C, D (4) B, D, E (5) C, D, E

**35.** புராதன இந்திய கல்வி நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட கற்றல் முறைகள் ஐந்து கீழே தரப்பட்டுள்ளன.

A - விவாத முறை
B - கலந்துரையாடல் முறை
C - ஒப்படை முறை
D - விரிவுரை முறை
E - கருத்தரங்கு முறை

இந்தக் கற்றல் முறைகளில் நாலந்த பல்கலைக்கழகத்தில் பயன்படுத்தப்பட்ட கற்றல் முறைகள் உள்ளடங்கிய விடையினைத் தெரிவுசெய்க.

(1) A, B, C (2) A, B, D (3) A, C, E (4) B, C, D (5) B, C, E

**36.** பௌத்தத்துக்கு முந்திய இலங்கையில் நிலவிய சமய வழிபாடுகள், நம்பிக்கைகளுக்கு மதிப்பளித்த பண்டுகாபய மன்னன் தனது அரண்மனைத் தோட்டத்தில் ஆலயம் (தேவாலய) ஒன்றைக் கட்டுவித்தது,

(1) காலவேல யக்ஷனுக்கு.
(2) சித்தராஜ யக்ஷனுக்கு.
(3) வளவாமுகி யக்ஷினிக்கு.
(4) பஸ்சிம ராஜினி யக்ஷினிக்கு.
(5) மஹேஜ யக்ஷனுக்கு.

**37.** அனுராதபுரக் காலத்தில் மகாவிகாரையிலும் அபயகிரி விகாரையிலும் வாழ்ந்த பிக்குமார்கள் சமயத்துக்குச் செய்த சேவைகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - இயற்கை அனர்த்தங்களின்போது தமது உயிரையும் பணயம் வைத்து பௌத்த சமயத்தைப் பாதுகாத்தல்
B - திரிபிடகத்தை நூலுருவாக்க முன்னோடியாக விளங்கியமை
C - புதிய பௌத்த சமயப்போக்குகளின் விழிப்புணர்வோடு முற்போக்குடன் செயற்பட்டமை
D - விரிவுரைகள் (அட்டுவா) நூல்களை தொகுப்பதில் முன்னோடிப்பணியை நிறைவேற்றியமை
E - புதிய சமய எண்ணக்கருக்களை அறிமுகப்படுத்தி சமய நம்பிக்கையை அதிகரிக்க முன்னோடிகளாகச் செயற்பட்டமை

மேலே தரப்பட்ட சமய சேவைகளில் அபயகிரி சம்பிரதாயத்துக்கு மிகப் பொருத்தமான இரண்டு வகை சேவைகளும் யாவை?

(1) A, B (2) B, C (3) C, D (4) C, E (5) D, E

[பக். 7 ஐப் பார்க்க

**38.** புராதன இலங்கையின் அரசாட்சி; பௌத்த சமயம் தொடர்பாகக் கீழே தரப்பட்டுள்ள கூற்றுகளில் **பிழையான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) பிராமண குருமார்களுக்கு உரியதாக இருந்த புரோகிதர் பதவி பௌத்த பிக்குமாருக்கு உரித்தானது.
(2) தூரநோக்கு இல்லாத அரசர்கள் சிலர் சமயத்துக்கு வழங்கிய காணிக்கைகளின் காரணமாக இலங்கையில் சங்க சமூகத்தில் பிரிவுகள் ஏற்பட்டன.
(3) வாலகம்பா மன்னனுக்கும் அவனுடைய தளபதிகளுக்கும் இடையில் ஏற்பட்ட பிணக்கு குப்பிகல மாதிஸ்ஸ தேரரின் தலையீட்டினால் தீர்வு ஏற்படுத்தப்பட்டது.
(4) பிக்குமாரின் தலையீட்டினால் சிம்மாசனத்துக்கு உரிய லஸ்ஸிதிஸ்ஸவுக்கு உரித்து இல்லாது துல்லத்தன முடிசூடிக் கொண்டான்.
(5) துட்டகைமுனு மன்னன் மூன்று நிக்காயக்களையும் ஒன்றுபடுத்தி பௌத்த சமயத்தைத் தூய்மையாக்கினான்.

**39.** மகாசேன மன்னனால் கட்டப்பட்ட ஜேதவன மரபுக்கு உரிய புகழ் பெற்ற விகாரை,
(1) இசுருமுனி விகாரை.
(2) தக்கிணகிரி விகாரை.
(3) பிரசினாராம விகாரை.
(4) இலங்காராம விகாரை.
(5) வெஸ்ஸகிரி விகாரை.

**40.** ஒரு சஷத்திரியன் புத்தர் பெருமானின் பிச்சைப் பாத்திரம், காவியுடை என்பவற்றைப் பாதுகாக்க மன்னன் ஆகினான் எனக் குறிப்பிடும் கி.பி 10 ஆம் நூற்றாண்டுக்கான கல்வெட்டு அமைக்கப்பட்டது .......................... மன்னால் ஆகும்.
(1) நான்காம் மகிந்த
(2) கீர்த்தி ஸ்ரீ நிசங்க மல்லன்
(3) கீர்த்தி ஸ்ரீ மேகவர்ணன்
(4) நான்காம் அக்போ
(5) துட்டகைமுனு

**41.** புத்தர் பெருமான் வாழும் காலத்திலேயே பர்மாவில் பௌத்த சமயம் அறிமுகமானது என்று அந்நாட்டில் நாட்டார் கதைகள் பல நிலவுகின்றன. அத்தகைய நாட்டார்கதை எனக் கருதப்பட **முடியாத** கூற்று,
(1) பர்மாவின் மக்கள் புத்தருக்காக சந்தனக்கட்டையால் ஆராமை ஒன்றைக் கட்டினார்கள்.
(2) தபஸ்ஸபாலுக்க என்ற வர்த்தகர்கள் புத்தரின் கேசதாது கொண்ட தூபி ஒன்றைக் கட்டினார்கள்.
(3) பர்மாவின் சில அரச பரம்பரை சாக்கிய குலத்துக்கு உரியது.
(4) சோன, உத்தர என்ற பிக்குமார்களின் அழைப்புக்கு இணங்க புத்தர் பர்மாவுக்கு வருகை தந்தார்.
(5) தனக்கவதி நகரின் சந்திரசூரிய மன்னனின் அழைப்பிற்கேற்ப புத்தர் பர்மாவிற்கு வருகை தந்தார்.

**42.** பர்மாவில் புத்த சமயத்தின் வளர்ச்சியில் பங்களிப்புச்செய்த முக்கிய காரணி திரிபிடகத்தை பர்மிய மொழியில் மொழி பெயர்த்தமை ஆகும். இவ்வாறு பர்மிய மொழியில் மொழிபெயர்ப்பதற்கு அனுசரனை வழங்கிய மன்னன்,
(1) கெயன்சித்த.
(2) நரபதிசித்து.
(3) மின்தொன் மின்.
(4) தம்மசேதிய.
(5) அனுருத்த.

**43.** பின்வரும் கூற்றுக்களில் தாய்லாந்தின் தற்காலிக துறவுடன் தொடர்புடைய **தவறான** கூற்று எது?
(1) துறவு பூணுதல் சடங்குகளுடன் நடத்தப்படும்.
(2) துறவு களைதலும் சடங்குகளுடன் நடத்தப்படும்.
(3) இருபது வயதான இளைஞர் துறவு பூணுதல் சிறிது காலத்துக்கு மட்டுமே என்பது புராதன மரபாகும்.
(4) தற்காலிக துறவு பூணுதல் திருமணத்துக்கான விசேட தகைமையாகும்.
(5) தற்காலிக துறவு பூணுதல் தொழில் ஒன்றைப் பெறுவதற்கான விசேட தகைமையாகும்.

**44.** இலங்கையில் இருந்து சீனாவுக்கு சென்ற தேவசாரபிக்குணியின் தலைமையிலான பிக்குணி குழுவினால் கி.மு 433 இல் சீனாவில் பிக்குணிசாசனம் தாபிக்கப்பட்டது என்று வரலாற்று அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பாரிய பணிக்கு ஆதரவு வழங்கிய பிக்கு,
(1) சங்கவர்மன்.
(2) போதிதர்ம.
(3) குமாரஜீவ.
(4) சுபாலன்.
(5) பாஹியன்.

[பக். 8 ஐப் பார்க்க

**45.** சென் பௌத்தம் ஜப்பானிய கலாசாரத்தின் அனைத்துத் துறைகளிலும் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த மாற்றத்தை அந்நாட்டின் பாரம்பரிய யுத்தக் கலையிலும் காணமுடியும் அந்த யுத்தக்கலை ஜப்பானில் ......................... எனப் பெயர் பெறுகிறது.
(1) கபுகி (2) புன்ரகு (3) சமுராய் (4) சுமியே (5) இகெபனா

**46.** மகாயான புத்தசமயம் பரவிய நாடுகளில் பெருமளவில் காணக்கூடிய புத்தர் சிலைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள தனித்துவமான ஆசன முறையான வஜ்ராசன இனால் வெளிப்படுத்தப்படுவது,
(1) சமாதி. (2) உபேக்ஷா. (3) மைத்திரி.
(4) மகாகருணா. (5) வீர்ய.

**47.** பாரத துபி கட்டிடக் கலைகளின் தோற்றம் பற்றிய பல்வேறுபட்ட கருத்துக்கள் நிபுணர்களிடையே காணப்படுகிறது. தூபியின் ஆரம்பம் ஸ்மாசனவிலிருந்தாகும். இக் கருத்தைக் கூறியவர் ......................... ஆவார்.
(1) ஏ. எம். ஹோர்காட் (2) வி. எஸ் அக்ரவால் (3) ஜோன் மார்சல்
(4) ரோலண்ட் சில்வா (5) பர்கிசன்

**48.** சந்திர வட்டக்கல்லில் ஒரு வரிசையில் நடந்து செல்லும் நான்கு மிருகங்கள் நான்கு திசைகளின் குறியீடு ஆகும். என்ற கூற்றினை வெளிப்படுத்தியவர்,
(1) எச். சி. பி. பெல் (2) டி. ரி. தேவேந்திர (3) வினி விதாரண
(4) வில்லியம் ஈ. வோட் (5) வின்சன்ட் ஸ்மித்

**49.** அனுராதபுரத்தில் காணக்கூடிய பல ......................... உச்சியானது பறக்கும் நாகத்தின் வாயைக் கொண்டதாக தோரணம் ஆரம்பித்து இந்த தோரணம் பெரிய வட்டமான அல்லது சுருளான சங்க சூரி லதாகர்ணவில் முடிவடைகிறது.
(1) காவற்கல்லில் (முறகல) (2) வாகல் கடவில்
(3) மாடிப்படி வரிசையில் (4) கொரவக்கல்லில்
(5) சந்திரவட்டக்கல்லில்

**50.** ஜாதகக் கதைகள் புத்தர் வரலாறு, இலங்கையின் சாசன வரலாறு, புனித சின்னங்களுடன் தொடர்புடைய மூவகை சைத்திய என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட சிங்கள மரபுவழி இலக்கியங்கள் பல உருவாகியுள்ளன. இத்தகைய மகா காவியமாக 'கவிசிலுமின' கொண்டாடப் படுகிறது. அந்த நூலின் கருப்பொருள்,
(1) புத்தர் வரலாறு. (2) மும்மணிகள்.
(3) குத்தில ஜாதக. (4) சத்துமத ஜாதக.
(5) குஸ ஜாதக.

* * *

ஸிகுல ம ஹிமிகம் ஆவிரிணி / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

බෞද්ධ ශිෂ්ටාචාරය II
பௌத்த நாகரிகம் II
Buddhist Civilization II

45 T II

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

※ **பகுதி I** இலிருந்து எவையேனும் **இரண்டு** வினாக்களையும் **பகுதி II** இலிருந்து எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

※ ஒவ்வொரு வினாவுக்கும் **20** புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

## பகுதி I

**1.** (i) க்ஷத்திரிய வர்ணத்திற்குரிய **நான்கு** கடமைகளின் (ஸ்வதர்ம)பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

(ii) பிராமண போதனைகளில் வரும் யாகங்கள் **மூன்றினைப்** பற்றிச் சுருக்கமாக அறிமுகப்படுத்துக. (03 புள்ளிகள்)

(iii) பிராமண சம்பிரதாயத்தினுள் பாரதப் பெண்களுடைய சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டு இருந்ததை வெளிப்படுத்தும் **நான்கு** காரணிகளைச் சுருக்கமாக எடுத்துக் காட்டுக. (04 புள்ளிகள்)

(iv) மக்கலீ கோசலையின் சமயபோதனைகளை ஒழுங்குமுறையில் விளக்குக. (05 புள்ளிகள்)

(v) மக்கலீ கோசலையின் போதனைகளை பௌத்தபோதனைகளுக்கு அமைவாக விமர்சிக்குக. (06 புள்ளிகள்)

**2.** (i) புத்தரின் பண்பான 'விஜ்ஜாசரண சம்பன்ன' இற்குரிய சரண தர்மங்கள் **நான்கினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) புத்தரின் (பத்மாகார) தாமரை போன்ற வாழ்க்கை பற்றிச் சுருக்கமாக விளக்குக. (03 புள்ளிகள்)

(iii) புத்தரின் மேலான ஞானத்தை (மஹாபிரக்ஞாவ) **நான்கு** காரணிகள் மூலம் எடுத்துக்காட்டுக. (04 புள்ளிகள்)

(iv) முன்மாதிரியான பௌத்த இல்லறத்தவனான (உபாசக) சித்த என்பவரின் நடத்தையினை மதிப்பிடுக. (05 புள்ளிகள்)

(v) நல்ல அரசாட்சியைக் கட்டியெழுப்புவதில் சப்த அபரிஹானிய தர்ம எவ்வளவுக்குப் பங்களிப்புச் செய்ய முடியும் என்பதை விளக்குக. (06 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!

3. (i) "தன்ஹாய ஜாயதி சோகோ" எனும் தம்மபத செய்யுளைச் சரியாகப் பூரணப்படுத்துக. (02 புள்ளிகள்)

(ii) மேலே 3(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள செய்யுளின் கருத்தை எழுதுக. (03 புள்ளிகள்)

(iii) சிகாலோவாத சூத்திரத்தில் வரும் கணவன் - மனைவியின் கடமைகள், பொறுப்புகள் **பத்தின்** பெயர்களைத் தருக. (04 புள்ளிகள்)

(iv) மாணவ வாழ்க்கையினை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்குரிய மங்கல காரணிகள் **ஐந்தினை** விவரிக்குக. (05 புள்ளிகள்)

(v) அளவற்ற ஆசைக்குப் பதிலாக குறைவான விருப்பு வாழ்க்கை காலத்தின் முக்கியத்துவத்தினை பௌத்த கற்பித்தல்களின் அடிப்படையில் கருத்துரைக்குக. (06 புள்ளிகள்)

## பகுதி II

4. (i) விழுமியப் பண்புடைய சமூகத்தைத் தாபிப்பதற்கு பத்து புண்ணிய காரியங்களை (தச புண்ணிய இரியாவத்து) எவ்வாறு பிரயோகிக்க முடியும் என்பதை விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) சத்தாவின் பிரிவுகளை விளக்கி எவ்வாறு சத்தா பௌத்த நடைமுறைக்கு அடிப்படையாக பங்களிப்புச் செய்கிறது என்பதை விளக்குக. (10 புள்ளிகள்)

5. (i) இல்லறவாழ்வின் நோக்கம் பொருளாதார செழிப்பு **மட்டும் அல்ல** என்பதை நால்வகை சுகங்களைப் பற்றிய பௌத்த கற்பித்தல்களின் துணையுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) தன்னார்வம் (ஸ்வசந்தா) பற்றிய பௌத்த போதனைகள் தனிநபர்களில் தன்னம்பிக்கையை விருத்தி செய்ய எவ்வாறு உதவும் என்பதை எடுத்துக்காட்டுக. (10 புள்ளிகள்)

6. (i) தர்ம தொடர்பாடலில் புத்தர் பயன்படுத்திய தொடர்பாடல் முறைகளை உதாரணங்களுடன் விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) மூன்றாவது பௌத்த மகாநாட்டுக்கு ஏதுவான காரணங்களை சுருக்கமாக எடுத்துக்காட்டி பௌத்த சமயத்தின் தொடர்ச்சியான நிலைத்திருப்புக்கு அதன் விளைவுகள் எவ்வாறு உதவின எனப் பரிசீலிக்குக. (10 புள்ளிகள்)

7. (i) பௌத்த காலத்திற்குமுன் இலங்கை மக்களிடையில் நிலவிய பிரசித்திபெற்ற வழிபாட்டுமுறைகள் நம்பிக்கைகள் பற்றி உதாரணங்கள் மூலம் எடுத்துக்காட்டுக. (10 புள்ளிகள்)

(ii) இலங்கை மக்கள் சமூகத்தில் நற்பண்புகளின் போஷாக்கில் மகிந்த தேரரின் வருகையினால் ஏற்பட்ட செல்வாக்கினை மதிப்பிடுக. (10 புள்ளிகள்)

8. (i) புத்தர் சிலைகளை அமைப்பதில் காந்தர, மதுரா மரபின் பண்புகளைச் சுருக்கமாக எடுத்துக்காட்டி இலங்கையின் புத்தர் சிலைகளின் தனித்துவமான பண்புகளை எடுத்துக்காட்டுக. (10 புள்ளிகள்)

(ii) பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டிற்கு** போதுமான குறிப்புகள் எழுதுக.

1) சைத்தியஹர
2) பத்திமாகர
3) முரகல
4) கொரவக்கல

(5×2 = 10 புள்ளிகள்)

***

PAST PAPERS WIKI




2024 A/L Tamil Past Paper Book (Tamil Medium)

රු 850.00

or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Political Science Past Paper Book (Tamil Medium)

රු 1,200.00

or 3 X රු 400.00 with KOKO




2024 A/L Islamic Past Paper Book (Tamil Medium)

රු 850.00

or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Islamic Civilization Past Paper Book (Tamil Medium)

රු 850.00

or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Geography Past Paper Book (Tamil Medium)

රු 1,000.00

or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Art Past Paper Book (Tamil Medium)

රු 500.00

or 3 X රු 166.67 with KOKO




2024 A/L SFT Past Paper Book (Tamil Medium)

රු 800.00

or 3 X රු 266.67 with KOKO




2024 A/L ICT Past Paper Book (Tamil Medium)

රු 900.00

or 3 X රු 300.00 with KOKO




2024 A/L ET Past Paper Book (Tamil Medium)

රු 850.00

or 3 X රු 283.33 with KOKO




2024 A/L BST Past Paper Book (Tamil Medium)

රු 800.00

or 3 X රු 266.67 with KOKO




2024 A/L Agricultural Science Past Paper Book (Tamil Medium)

රු 1,100.00

or 3 X රු 366.67 with KOKO




2024 A/L Common General Test Past Paper Book (Tamil Medium)

රු 600.00

or 3 X රු 200.00 with KOKO




2024 A/L Business Studies Past Paper Book (Tamil Medium)

රු 850.00

or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Accounting Past Paper Book (Tamil Medium)

රු 1,000.00

or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Economics Past Paper Book (Tamil Medium)

රු 900.00

or 3 X රු 300.00 with KOKO




2024 A/L Chemistry Past Paper Book (Tamil Medium)

රු 1,000.00

or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Biology Past Paper Book (Tamil Medium)

රු 750.00

or 3 X රු 250.00 with KOKO




2024 A/L Physics Past Paper Book(Tamil Medium)

රු 1,050.00

or 3 X රු 350.00 with KOKO



**LOL STORE PVT LTD** Copyright ©2023

We Using Safe Payment For

Easy Monthly Installments | KOKO | CASH ON DELIVERY | VISA